**தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியம்  - 2022**

**------------------------------------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் தொடர்பான கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதயம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவணையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும், வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 1 இன் 48 பந்தியின் பிரகாரம், வருமானம் மற்றும் செலவுகள் எதிரீடு செய்யப்படக் கூடாது எனினும், அதற்கு முரணாக தேசிய கண் வங்கியினால் வெளிநாடுகளுக்கு வழங்கியிருந்த விழிப் படலங்களுக்காக பெறப்பட்ட வருமானம் (Processing Charges) ரூபா 63,255,479 தொகை விழிப் படல சேமிப்பு ஊடகத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 4,355,052 இற்கான செலவிலிருந்து எதிரீடு செய்து நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | தேசிய கண் வங்கி வெளிநாடுகளுக்கு விழிப் படலங்கள் வழங்கும் போது சேமிப்பு ஊடகத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த செலவுகள் அவர்களிடம் தனியாக அறவீடு செய்யப்படுகின்றதெனவும், விழிப் படல சேமிப்பு ஊடகத்திற்காக மேற்கொள்ளப்படும் செலவு உண்மையாகவே செலவொன்றாக காணப்படுவதால் அதனை விழிப் படலத்திற்காக கிடைத்திருந்த வருமானக் கணக்கிலிருந்து சேமிப்பு ஊடக செலவுக் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கு 2022 ஆண்டிற்கான ரூபா 4,355,050 தொகை செலவொன்றென இனங் காணப்பட்டு மாற்றப்பட்டிருந்தது என. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 3 இன் 47 பந்தியின் பிரகாரம், பொருண்மையான முன்னைய காலப் பகுதிக்கான தவறுகள் அவை கண்டு பிடித்த பின்னர் வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட முதலாவது நிதிக்கூற்றுத் தொகுதியில் தவறு ஏற்பட்ட காலப் பகுதிக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஒப்பீட்டு ரீதியான பெறுமதிகள் மீண்டும் வெளியிடப்பட்டு பின்னோக்கி சரி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அதன்படி, செயற்படாமல் தேசிய கண் வங்கியின் முன்னைய ஆண்டுகளுக்கான சீராக்கல் என கூட்டுத்தொகை ரூபா 5,331,981 இற்கான மீதியொன்று 2022 | தேசிய கண் வங்கியின் வருமானம் மற்றும் செலவுகள் அட்டுரு அடிப்படையில் இனங் கண்டு தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தினால் கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2010 தேசிய கண் வங்கி ஆரம்பம் முதல் காசு அடிப்படையிலேயே கணக்கீடு செய்யப்பட்டிருந்தது எனவும் மற்றும் அதன் மூலம் தேசிய கண் வங்கியின் திரண்ட நிதியம் 2022 ஜனவரி 01 திகதி அளவில் ரூபா 5,331,981 தொகையினால் மிகை மதிப்பீடு ஆகியிருந்ததுடன், அது 2022 ஜனவரி 01 திகதி முன் | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஜனவரி 01 திகதி முன் கொண்டு வரப்பட்டிருந்த திரண்ட மீதியுடன் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. | கொண்டு வரப்பட்டிருந்த திரண்ட மிகையுடன் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது என. | |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 7 இன் 65 பந்தியின் பிரகாரம், நடைமுறை அல்லாத சொத்துக்களுக்காக ஆக்கபூர்வமான ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையால் தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் மற்றும் தேசிய கண் வங்கியின் கூட்டுத்தொகை ரூபா 4,291,988 தொகைக்கான நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டுக் காணப்பட்டது. அதன்படி, ஏற்பட்டிருந்த மதிப்பீட்டு வழு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2022 பண்ட கணிப்பீட்டு அறிக்கையின் படி சில நிலையான சொத்துக்கள் தற்போது பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்ததுடன், தொடர்ந்தும் பயன்படுத்துவதற்கு முடியாத நிலைமையொன்று காணப்படுகின்றதென உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என, 2023 ஆண்டில் இந்த சொத்துக்கள் அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் மற்றும் அதன்படி, மதிப்பீட்டு வழுவொன்று காணப்படவில்லை எனவும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதியத்தினால் அறவிட முடியாக் கடன் ஏற்பாடுகளுக்காக கொள்கையொன்று இனங் காணப்பட்டு அது தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்காததுடன், 2005 ஆண்டின் போது மீகஹகிவுல வைத்தியசாலையில் வார்டு தொடர் கட்டிடம் நிர்மாணிக்கும் ஒப்பந்த வேலைகள் பூர்த்தி செய்யப்படாமையால் தனியார் காப்புறுதிக் கம்பனியொன்றிலிருந்து பெற வேண்டிய செயலாற்றுகை பாதுகாப்பு முறியின் பெறுமதி ரூபா 1,372,346 தொகைக்காக மீளாய்வாண்டின் போது 100 | 100 சதவீத அறவிட முடியா மற்றும் ஐயக் கடன் ஒதுக்க அடிப்படையாவது 2010 ஒக்தோபர் 26 திகதி அளவில் செயலாற்றுகை பிணைமுறி காலவதியாகியிருந்தமையால் ரூபா 1,372,346 இற்கான தொகையினை செலுத்த முடியாது என பிரதிப் பணிப்பாளர் நாயகம் (வழங்கல்) இற்கு செலிங்கோ காப்புறுதி கம்பனியினால் அறிவிக்கப்பட்டுள்ளதென, அதன்படி, மீளாய்வாண்டினுள் அறவிட முடியா மற்றும் ஐயக்கடன் ஒதுக்க அடிப்படை இ.பொ.து.க.நி. இலக்கம் 8 இன் 22 பந்தியின் படி சரியாக இனங்கண்டிருந்ததென. | நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது கணக்கீட்டு கொள்கைகளை இனங்கண்டு வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| சதவீதம் அறவிட முடியா மற்றும் ஐயக் கடன் ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை. | | |
| (ஆ) மீளாய்வாண்டின் போது மகரகம அபேக்ஷா வைத்தியசாலையினால் பில் பத்திரம் ஏதும் சமர்ப்பிக்காத போதிலும், அபேக்ஷா வைத்தியசாலையின் வெளி தரப்பினருக்கு கொடுப்பனவு செய்வதற்காக ரூபா 202,309,478 இற்கான தொகையொன்று அபேக்ஷா வைத்தியசாலைக்கான நன்கொடைக் கணக்கிலிருந்து கழித்து அட்டுருச் செலவுகள் என நிதிக் கூற்றுக்களில் காட்டியிருந்தமையால் ஆண்டிற்கான மிகை அதே தொகையினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | அபேக்ஷா வைத்தியசாலையின் CT Stimulator இயந்திரத்திற்காக ரூபா 202,309,478 இற்கான தொகைக்குரிய தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு அறிக்கை உட்பட ஆவணங்கள் 2022 திசெம்பர் 16 திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தென மற்றும் அந்தச் செலவுகள் 2022 திசெம்பர் 31 திகதி அளவிலும் அட்டுருவாக காணப்பட்டமையால் அந்த செலவுகள் இ.பொ.து.க.நி. இலக்கம் 1 இன் படி சரியான முறையில் செலவு ஒன்றென இனங்கண்டு மீளாய்வாண்டின் போது கணக்கீடு செய்யப்பட்டுள்ளது என. | அட்டுருச் செலவுகளை சரியான முறையில் இனங் காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6 பெற வேண்டிய பணம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமப/12/0489/509/022 இலக்கம் கொண்ட 2012 மே 04 திகதிய அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் வட மாகாணத்தின் புற்றுநோயாளர்களுக்கான செயற்திட்டம் செயற்படுத்துவதற்காக (Trail Project) சுகாதார அமைச்சு, மாகாண சுகாதார அமைச்சு, தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியம் மற்றும் உதவி வழங்கும் நிறுவனமாகிய Colours of Courage Trust நம்பிக்கை பொறுப்பு நிதியம் ஆகிய ஆறு தரப்பினர்களுக்குமிடையே புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கையொப்பமிடப்பட்டிருந்தது. அந்த உடன்படிக்கையின் படி யாழ்பாண போதனா வைத்தியசாலையில் மற்றும் தெல்லிப்பலை ஆதார வைத்தியசாலையில் புற்றுநோய் | 2023 திசெம்பர் 06 திகதி சுகாதார செயலாளரின் தலைமையில் மற்றும் Colours of Courage Trust பங்குபற்றலின் கீழ் நடைபெற்ற கலந்துரையாடலில் மேற்கூறிய நிறுவனம் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்படுவதாக அறிவித்திருந்த போதிலும், இதுவரை 2022 மார்ச் 31 வரையான காலப் பகுதியுள் சேகரிக்கப்பட்ட ரூபா 62.16 மில்லியனிற்கான தொகையினை இதுவரை நிதியத்திற்கு வழங்கியிருக்கவில்லை. | பெற வேண்டிய தொகையை விரைவாக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

அலகுகளை அபிவிருத்தி செய்தல் செயற்திட்டத்தின் குறிக்கோளாக இருந்தது. இதன் கீழ் தெல்லிப்பலை ஆதார வைத்தியசாலையின் கதிர்வீச்சு சிகிச்சை அலகு நிர்மாணித்தல் மற்றும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் சிறுவர் சிகிட்சை அலகுக்காக தேவைப்படும் மருத்துவ உபகரணங்கள் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. கணக்காய்விற்கு கிடைத்த தகவல்களின் படி தெல்லிப்பலை வைத்தியசாலையின் கதிர்வீச்சு சிகிச்சை அலகு நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 244.5 மில்லியன் தொகையில் ரூபா 218.6 மில்லியன் தொகை Colours of Courage Trust நிறுவனம் உதவியாக வழங்கியிருந்தது. எனினும், இந்த செயற்திட்டத்தின் கீழ் சேகரிக்கப்பட்டும் அனைத்துப் பணம் மற்றும் வைப்புச் செய்யப்பட்ட தொகை சுகாதார அமைச்சின் சொத்து ஒன்றாக காணப்படுவதுடன், உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மீதித் தொகை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் புற்றுநோய் அலகினை அபிவிருத்தி செய்வதற்காக ஈடுபடுத்த வேண்டியிருந்த போதிலும், Jaffna Project என்ற பெயரில் மேற்கூறிய நம்பிக்கை பொறுப்பு நிதியத்தினால் 2022 மார்ச் 31 திகதி வரையான காலப் பகுதியினுள் சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 62.16 மில்லியன் தொகையொன்று இதுவரை குறிப்பிட்ட உடன்படிக்கையின் கருமங்களை நிறைவேற்றுவதற்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் மேற்கூறிய Colours of Courage Trust நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் பொறுப்பில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2021 நவம்பர் 16 திகதிய 01/2021 இலக்கங் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் கூட்டுத்தாபனம் சார் நிருவாகத்திற்கான வழிகாட்டலில், வழிகாட்டல் 2.3 | சட்டத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ளக் கூடியவாறு மூலோபாயத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக அவ்வாறான திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தே.சு.அ. நிதியத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ளக் கூடியவாறு 2022 ஆண்டின் மூலோபாயத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என. | பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) 1981 இன் 13 ஆம் இலக்க தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியச் சட்டத்தின் பிரிவு 3(2)(உ) | நிதியத்தின் நிருவாகம், முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாட்டுக்காக சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அமைச்சரினால் நம்பிக்கை பொறுப்பு சபைக்கு நியமனம் செய்யப்படும ஒரு அங்கத்தவர் 2021 செப்தெம்பர் 21 திகதி முதல் அங்கத்துவத்தில் இருந்து விலகியிருந்ததுடன் 2020 பெப்ரவரி 11 திகதி நியமனம் செய்யப்பட்டிருந்த ஒரு அங்கத்தவர் நம்பிக்கை பொறுப்பு சபையின் கூட்டங்களில் பங்குபற்றி இருக்கவில்லை. இதற்காக புதிய அங்கத்தவர்கள் நியமனம் செய்வதற்கு இந்த அறிக்கை திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக சுகாதார செயலாளர், தலைவர் தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் மூலம் சுகாதார அமைச்சருக்கு மீளாய்வாண்டின் போது அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | வெற்றிடமாகக் காணப்படும் நம்பிக்கை பொறுப்பு சபை பதவிகளுக்காக விரைவாக புதிய அங்கத்தவர்கள் நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) 1981 இன் 13 ஆம் இலக்க தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியச் சட்டத்தின் பிரிவு 7 | நிதியம் சட்டத்தின் கருமங்களின் விடயப்பரப்பில் உட்படாத செயற்பாடுகளுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 2,000,000 தொகை சங்கம் ஒன்றிற்கு நன்கொடையாக வழங்கியிருந்தது. | 1981 இன் 13 ஆம் இலக்க தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் 7(ஆ) படி இலங்கையின் சுகாதாரம் சார் பாதுகாப்பு சேவைகளில் கடமையாற்றும் ஆட்களின் கல்வி அல்லது ஞானத்தை அபிவிருத்தி செய்வதற்காக நிதியம் வழங்க முடியும் என, INPALMS 2022 இன் | சட்டத்தில் காட்டப்பட்டுள்ள கருமங்களின் விடயப் பரப்பில் உட்படாத தொழிற்பாடுகளுக்காக நிதி உதவிகள் வழங்கப்படக் கூடாது. |

குறிக்கோளாவது Legal Medicine, Forensic Science ஆகிய துறைகளில் கல்வி மற்றும் ஆய்வுகளுக்கானவை என மற்றும் அதன் படி சட்டங்கள் ஒழுங்கு முறைகளுக்கு முரணாக செயற்பட்டிருக்கவில்லை என.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 164,877,522 இற்கான மிகை ஒன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 188,434,937 தொகை ஆக இருந்தது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 23,557,415 இற்கான பின்னடைவு ஒன்று அவதானிக்கப்பட்டது. இந்த பின்னடைவிற்கு மீளாய்வாண்டின் நிதியம் மற்றும் ஏனைய மாற்றச் செலவுகள் ரூபா 1,596,342,339 தொகையினால் அதிகரித்தல் பிரதானமான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை தேசிய கண் வங்கி நிறுவுவதற்காக சிங்கப்பூரின் Asia Cornea Foundation நிறுவனத்துடன் 2010 ஆண்டில் அணுகியிருந்த புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி மற்றும் இலங்கை தேசிய கண் வங்கி நம்பிக்கை பொறுப்பு ஒன்றென நிறுவுவதற்காக 2013 ஆகஸ்ட் 29 திகதி கிடைத்திருந்த அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம், இலங்கை தேசிய கண் வங்கி சட்டம் ஒன்றின் மூலம் வேறான நிறுவனம் சார் கட்டமைப்பு ஒன்றுடனான அலகொன்றாக நிறுவுவதற்கு மற்றும் அதன் கொடுக்கல் வாங்கல்களை அறிவிப்பதற்காக வேறாக நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்கு 2023 ஜூலை 30 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அமைச்சரவை பத்திர இலக்கம் 13/1172/509/052 இல் காட்டப்பட்டுள்ள அமைச்சரவை தீர்மானமானது இலங்கை தேசிய கண் வங்கி (இ.தே.க.வ) நம்பிக்கை பொறுப்பு ஒன்றென நிறுவும் வரை செயற்திட்டம் ஒன்றாக பேணிச் செல்லல் ஆகும் என மற்றும் நம்பிக்கை பொறுப்பு என நிறுவுவதற்குரிய அமைச்சரவை பத்திரங்கள், சட்டங்கள் மற்றும் அதற்குரிய சட்ட நடவடிக்கைகள் சட்டப் பிரிவின் மூலம் நடாத்தப்படுகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது என. | இலங்கை தேசிய கண் வங்கி வேறான நிறுவனம் சார் கட்டமைப்பு ஒன்றுடன் சட்ட ரீதியான அலகு ஒன்றாக நிறுவுதல் விரைவுபடுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை தேசிய கண் வங்கி நம்பிக்கை பொறுப்பு என நிறுவும் வரை அதன் அலுவல்கள் செயற்திட்டம் ஒன்றாக தொடர்ந்து பேணிச் செல்வதற்கும், 2007 ஏப்ரல் 05 ஆம் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கையின் படி பதவியணியினர் ஆட்சேர்ப்பதற்கும் மற்றும் சம்பளம் செலுத்துவதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும், 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் பந்தி 1.1 இன் பிரகாரம் இலங்கை தேசிய கண் வங்கி செயற்திட்டம் ஒன்றென கணிப்பதற்கு தேவையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காமையால் அமைச்சரவை தீர்மானத்தின் படி செயற்பட முடியாதிருந்ததுடன், கண் நம்பிக்கை பொறுப்பு நிறுவுவதற்கும் சட்டவரைவுக்காக 2022 ஆகஸ்ட் 15 திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதிவரையும் அங்கீகாரத்திற்காக பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | நம்பிக்கை பொறுப்பு ஒன்றென நிறுவுவதற்குரிய அமைச்சரவை பத்திரம் சட்டம் மற்றும் அதற்குரிய சட்ட நடவடிக்கைகள் சட்டப் பிரிவின் மூலம் நடாத்தப்படுகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது என. | முகாமைத்துவச் சேவை திணைக்கள சுற்றறிக்கையின் படி தேசிய கண் வங்கி செயற்திட்டம் ஒன்றாக கணிக்க முடியாது எனவும், அதன் படி பதவியணியினர் ஆட்சேர்ப்பதற்கு முடியாது எனவும் அமைச்சரவைக்கு அறிவுருத்த வேண்டியதுடன் எடுக்க வேண்டிய மாற்று நடவடிக்கைகள் தொடர்பாக கண்டறிந்து அதன் படி செயற்பட வேண்டும். |
| (இ) | 2011 மார்ச் 23 திகதிய அமப/11/0465/509/056 இலக்கங் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் ரூபா 4.68 மில்லியனுக்கான மதிப்பீட்டுத் தொகைக்கு அம்பாறை பொது வைத்தியசாலைக்கு சொந்தமான கட்டிடம் ஒன்று திருத்த வேலை மேற்கொண்டு கொடுப்பனவு வாட்டு ஒன்று நிர்மாணிப்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் கட்டிடம் ஒன்றின் திருத்த வேலைகள் மேற்கொள்வதற்கு பதிலாக 8 அறைகளை கொண்ட தரைமாடிக் கட்டிடம் ஒன்று நிர்மாணிப்பதற்காக சுகாதார அபிவிருத்தி நிதியத்தில் இருந்து ரூபா 18.20 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. மேற்கூறிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் கொடுப்பனவு வாட்டு | 2022 ஆண்டில் நாட்டில் ஏற்பட்டிருந்த நிலைமையின் காரணமாக கொடுப்பனவு வாட்டுக்காக நோயாளர்கள் உட்படுத்தப்பட்டிருக்காமையால் வருமானம் கிடைத்திருக்கவில்லை என அம்பாறை பொது வைத்தியசாலையினால் நிதியத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது என. | ஆக்கபூர்வமான செயற்திட்டங்களுக்காக நிதியத்தின் பணத்தை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

வருமானத்தில் 60 சதவீதம் தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்திற்கு செலவு வைப்பதற்கும் மீதித் தொகை திரண்ட நிதியத்திற்கு செலவு வைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2017 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த இந்த கொடுப்பனவு வாட்டின் மூலம் 2018 முதல் 2021 வரை மொத்த வருமானம் ரூபா 2,113,931 தொகையாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் போது வருமானம் ஏதும் பெற்றுக் கொள்ளாமல் விளைவற்றுக் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது.

## 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நன்கொடை கணக்கில் காணப்பட்ட ரூபா 1,080,398,675 இற்கான மீதியில் மஹரகம புற்றுநோய் வைத்தியசாலை, சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலை மற்றும் அங்கொட மனநோய் வைத்தியசாலைகளில் மற்றும் IDH வைத்தியசாலைகளுக்கு பல்வேறு ஆட்களினால் மற்றும் நிறுவனங்களினால் பல்வேறு கருமங்களுக்காக கடந்த ஆண்டுகளின் போது மற்றும் மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த நன்கொடைத் தொகையின் கூட்டுத்தொகை ரூபா 899,119,214 தொகை உரிய கருமங்களுக்காக பயன்படுத்தாமல் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட கருமங்களுக்காக கிடைக்கும் நன்கொடை, நிதியத்திற்கு கிடைப்பது உரிய நிறுவன தலைவர்களின் அறிவுடன் எனவும் அத்துடன் அந்த நிறுவனத் தலைவர்களுக்கு அறிவிப்பதன் மூலம் நம்பிக்கை பொறுப்பு சபையின் அங்கீகாரத்தின் கீழ் கொடுப்பனவு செய்யப்படுவதுடன் அந்த செயற்திட்டங்கள் செயற்படுத்தும் நிறுவனங்களின் கோரிக்கைக்கு முரணாக உரிய கருமங்களுக்கு ஈடுபடுத்தாமல் நீண்ட காலமாக நியத்தில் தடுத்து வைத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என. | நிதியம் வினைத் திறனுடன் மற்றும் ஆக்கபூர்வமான பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | கணக்காய்விற்கு கிடைக்கப்பட்ட தகவல்களின் படி 1997 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரையான காலப் பகுதியுள் நிதியத்திற்கு பல்வேறு 09 செயற்திட்டங்கள் தொடர்பாக கிடைத்திருந்த நன்கொடைகளின் கூட்டு மீதி 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 12,266,239 | அந்த விஷேட செயற்திட்டத்தை செயற்படுத்தும் அதிகாரி குறிப்பிட்ட நன்கொடை வழங்கும் நிறுவனத்தின் தலைவர் மூலம் எனவும், குறிப்பிட்ட நிறுவனத்தின் தலைவர் அந்த கருமங்களை செயற்படுத்த வேண்டியிருந்த | குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு அறிவுருத்தி நிதியத்தை செயற்திறனுடன் மற்றும் ஆக்கபூர்வமாக பயன்படுத்த |

| | | | |
|---|---|---|---|
| | தொகையாக காணப்பட்டதுடன், கடந்த 04 வருடங்களில் இந்த நிதியத்தின் மூலம் செலவுகள் ஏதும் குறிப்பிட்ட செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்டிருக்கவில்லை. | போதிலும், அந்த செயற்திட்டத்தை செயற்படுத்தும் அதிகாரம் நிதியத்திற்கு காணப்படவில்லை என. | வேண்டும். |
| (இ) | 1998 ஆண்டு முதல் 2020 ஆண்டு வரை பல்வேறு கருமங்களை நிறைவேற்றுவதற்காக நிதியத்திற்கு கிடைத்திருந்த கூட்டுத்தொகை ரூபா 55,745,076 தொகைக்கான 5 நன்கொடைத் தொகை குறிக்கோள் சார் கருமங்கள் நிறைவேற்றுவதற்காக ஈடுபடுத்துவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 1981 இன் 13 ஆம் இலக்க தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியச் சட்டத்தின் பிரிவுகள் 6 மற்றும் 7 (இ) படி விஷேட திட்டம் ஒன்றிற்காக கிடைக்கக் கூடிய நன்கொடை, நிதியத்திற்கு செலவு வைக்கப்படுவதுடன், அந்த விஷேட செயற்திட்டத்திற்கான அரச ஒழுங்குகளுக்கு இணக்கமின்றிய கொடுப்பனவுகள் மாத்திரம் தே.சு.அ. நிதியத்தின் கருமங்களாக காணப்படுவதெனவும் மற்றும் அந்த விஷேட செயற்திட்டத்திற்குரிய நிறுவனத்தினால் செயற்படுத்த வேண்டியதுடன், அந்த செயற்திட்டத்தை செயற்படுத்தும் அதிகாரம் நிதியத்திடம் காணப்படவில்லை என. | குறிப்பிட்ட நிறுவனங்களை அறிவுருத்தி நிதியத்தை செயற்திறனுடன் மற்றும் ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | இலங்கையில் தேசிய ஹியுமன் பெபிலோமா வைரஸ் தடுப்பூசி வழங்குவதற்கு தற்போது காணப்படும் கிரயம் மற்றும் செயற்பாட்டு சந்தர்ப்ப மதிப்பீட்டு செயற்திட்டத்திற்காக ஐக்கிய அமெரிக்காவின் Path அமைப்பினால் இரண்டு சந்தர்ப்பங்களில் கூட்டுத்தொகை ரூபா 18,342,050 இற்கான தொகையொன்று மானியம் என சுகாதார அபிவிருத்தி நிதியத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. நிதியமைச்சின் வெளிநாட்டு மூலவள திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் Scl/Pmu/Grant/19 மற்றும் 2019 ஜூலை 25 திகதிய கடிதத்தின் படி மேற்கூறிய தொகையில் இருந்து ரூபா 7,179,900 இற்கான வெளிநாட்டு மானியம் தொடர்பாக வெளிநாட்டு மூலவளத் திணைக்களத்திற்கு அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதியமைச்சின் வெளிநாட்டு மூலவள திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் Scl/Pmu/Grant/19 மற்றும் 2019 ஜூலை 25 திகதிய கடிதத்தின் படி ரூபா 7,179,900 இற்கான வெளிநாட்டு மானியம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதியமைச்சின் உள்நாட்டு மூலவள திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (உ) 2022 ஜனவரி 01 திகதி அபேக்ஷா வைத்தியசாலைக்கான நன்கொடைக் கணக்கில் ரூபா 280,187,967 இற்கான தொகையொன்று காணப்பட்டதுடன், அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது. | | |
| (i) 2015 ஆண்டின் போது சிறுவர் வாட்டு ஒன்று நிர்மாணிப்பதற்காக நன்கொடையாக வழங்கப்பட்டு இருந்த ரூபா 25,500,000 இற்கான தனிப்பட்ட நன்கொடை மற்றும் 2019 ஆண்டின் Thormotheropy இயந்திரம் கொள்வனவு செய்வதற்காக கிடைத்திருந்த ரூபா 127,990,440 இற்கான பொதுமக்கள் உதவித் தொகை குறிப்பிட்ட கருமங்களை நிறைவேற்றுவதற்காக ஈடுபடுத்தியிருக்கவில்லை. | திருமதி. திலினி த சில்வா அவர்களின் இறுதி விருப்பாவணத்தின் படி சிறுவர் வார்ட் ஒன்று நிர்மாணிப்பதற்காக ரூபா 25,550,000 இற்கான தொகை மற்றும் Thormotheropy இயந்திரம் கொள்வனவு செய்வதற்காக கிடைத்திருந்த பொது மக்கள் உதவி ரூபா 127,990,440 இற்கான தொகை உட்பட அபேக்ஷா வைத்தியசாலை மஹரகம நன்கொடை மீதியை பயன்படுத்தி CT Simulators இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்வதற்காக பணிப்பாளர் அபேக்ஷா வைத்தியசாலையினால் நிதியத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது எனவும் மற்றும் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது எனவும். | நிதியத்தின் பணம் செயற்திறனுடன் மற்றும் ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) நிலவுகின்ற பொருளாதார நெருக்கடி முன்னிலையில் நோயளர்களின் உபசரணைசேவை தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்காக Thormotheropy இயந்திரம் கொள்வனவு செய்வதற்காக சேகரிக்கப்பட்ட உதவித் தொகை Pet Scan இயந்திரம் கொள்வனவு செய்த பின்னர் மீதியாக காணப்பட்ட தொகையை பயன்படுத்தி CT Simulators இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்வதற்கு, அந்த இயந்திரத்தை பொருத்துவதற்கு தேவையான கட்டிடம் ஒன்று நிர்மாணித்தல் மற்றும் Sonial vision X ray இயந்திரம் | திருமதி. திலினி த சில்வா அவர்களின் இறுதி விருப்பான்மையின் படி சிறுவர் வார்ட் ஒன்று நிர்மாணிப்பதற்காக ரூபா 25,550,000 இற்கான தொகை மற்றும் Thormotheropy இயந்திரம் கொள்வனவு செய்வதற்காக கிடைத்திருந்த பொது மக்கள் உதவி ரூபா 127,990,440 இற்கான தொகை உட்பட அபேக்ஷா வைத்தியசாலை மஹரகம நன்கொடை மீதியை பயன்படுத்தி CT Simulators இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்வதற்காக பணிப்பாளர் அபேக்ஷா வைத்தியசாலையினால் | நிதியத்தின் பணம் செயற்திறனுடன் மற்றும் ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவுவதற்கான கட்டிடத்திற்காக மின்சாரம் பெற்றுக் கொள்ளல் ஆகிய கருமங்களை நிறைவேற்றுவதற்கு ரூபா 202,309,478 தொகை தேவை என 2022 ஜூன் 29 திகதிய கடிதம் ஒன்றின் மூலம் அபேக்ஷா வைத்தியசாலையின் பணிப்பாளரினால் சுகாதார அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த கருமங்களுக்கான பரிந்துரைகள் வழங்குவதற்காக நியமனம் செய்யப்பட்ட குழுவின் 2022 திசெம்பர் 13 திகதிய பரிந்துரையின் படி 2022 திசெம்பர் 16 திகதிய அபேக்ஷா வைத்தியசாலையின் பணிப்பாளரினால் சுகாதார அமைச்சுச் செயலாளர் மூலம் குறிப்பிட்ட ஏற்பாடுகளை ஒதுக்கிக் கொள்வதற்காக கோரப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட கருமங்களை நிறைவேற்றல் தொடர்பாக கணக்காய்வுத் திகதியாகிய 2023 ஜூலை 18 திகதி வரை நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதியத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது எனவும் மற்றும் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது எனவும். | |
| (ஊ) | ஹம்பாந்தோட்டை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு PCR Testing Machine கொள்வனவு செய்வதற்காக நன்கொடை வழங்கும் பல நிறுவனங்களினால் வழங்கியிருந்த கூட்டுத்தொகை ரூபா 27,192,285 இற்கான தொகையில் ரூபா 6,783,190 இற்கான தொகையான மீதித் தொகை 2022 திசெம்பர் 31 திகதி வரை குறிப்பிட்ட கருமங்களில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஹம்பாந்தோட்டை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு ரூபா 6,783,190 நன்கொடையை செலவீடு செய்யும் அதிகாரம் ஹம்பாந்தோட்டை மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளருக்கே காணப்படுவதுடன் தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் மூலம் எவ்விதத்திலும் தடுத்து வைக்கப்படவில்லை என இந்த மீதி தொடர்பாக ஹம்பாந்தோட்டை மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளருக்கு நிதியத்தினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது எனவும். | நிதியத்தின் பணம் செயற்திறனுடன் மற்றும் ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

(எ) தேசிய கண் வங்கியின் 2020 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரையான காலப் பகுதியில் செயலாற்றுகை கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| **ஆண்டு** | **2020** | | | **2021** | | | **2022** | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சேகரிக்கப்பட்ட விழிப் படலம் (விழிவென் படலம்) எண்ணிக்கை | 1014 | | | 665 | | | 1010 | | |
| விழிப் படலம் (விழிவென் படலம்) பயன்பாடு | கேள்வி | வழங்கள் | வழங்களின் சதவீதம் | கேள்வி | வழங்கள் | வழங்களின் சதவீதம் | கேள்வி | வழங்கள் | வழங்களின் சதவீதம் |
| அரச வைத்தியசாலைகள் | 791 | 571 | 72 | 686 | 294 | 43 | 767 | 454 | 59 |
| தனியார் வைத்தியசாலைகள் | 257 | 189 | 74 | 256 | 124 | 48 | 357 | 195 | 55 |
| வெளிநாடுகள் | 220 | 185 | 84 | 269 | 223 | 83 | 344 | 325 | 94 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| (i) 2020 ஆண்டிற்கு ஒப்பாக 2021 ஆண்டின் கண் வங்கியினால் சேகரிக்கப்பட்டிருந்த கண் வெண்படலங்களின் எண்ணிக்கை 34 சதவீதத்தினால் குறைந்திருந்ததுடன் 2022 ஆண்டின் போது 2021 ஆண்டிற்கு ஒப்பாக அந்த எண்ணிக்கை 52 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. | தேசிய கண் வங்கி வரையறுக்கப்பட்ட பதவியணியினருடன் கடமை ஆற்றப்படுகின்றது எனவும் தேசிய கண் வங்கி கூடிய கவனம் செலுத்துவது உள்நாட்டு விழிவென்படலம் வழங்களுக்காகவே என. | உள்நாட்டு விழிவென்படல தேவைப்பாட்டை பூர்த்தி செய்வதற்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும். |
| (ii) 2020 ஆண்டில் அரச வைத்தியசாலைகளில் இருந்து கண் விழிவென்படலத்திற்கான கேள்வியில் 72 சதவீதமும், 2021 ஆண்டில் 43 சதவீதமும், 2022 ஆண்டில் 59 சதவீதமும் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. | தேசிய கண் வங்கி வரையறுக்கப்பட்ட பதவியணியினருடன் கடமை ஆற்றப்படுகின்றது எனவும் தேசிய கண் வங்கி கூடிய கவனம் செலுத்துவது உள்நாட்டு விழிவென்படலம் வழங்களுக்காகவே என. | உள்நாட்டு விழிவென்படல தேவைப்பாட்டை பூர்த்தி செய்வதற்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும். |
| (iii) 2020 ஆண்டின் போது உள்நாட்டு தனியார் வைத்தியசாலைகளில் இருந்து மேற்கொள்ளப்பட்டிருந்த கேள்விகளில் 74 சதவீதமும், 2021 ஆண்டில் 48 சதவீதமும், 2022 ஆண்டில் 55 சதவீதமும் என வழங்கப்பட்டிருந்தது. | தேசிய கண் வங்கி வரையறுக்கப்பட்ட பதவியணியினருடன் கடமை ஆற்றப்படுகின்றது எனவும் தேசிய கண் வங்கி கூடிய கவனம் செலுத்துவது உள்நாட்டு விழிவென்படலம் வழங்களுக்காகவே என. | உள்நாட்டு விழிவென்படல தேவைப்பாட்டை பூர்த்தி செய்வதற்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (iv) 2020 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரையான காலப் பகுதியில் வெளிநாடுகளில் இருந்து விழிவென்படலத்திற்கான மேற்கொள்ளப்பட்ட கேள்வியில் 83 சதவீதம் முதல் 94 சதவீதம் வரையான வீச்சு அளவொன்று வழங்கப்பட்டிருந்தது. இதன் படி உள்நாட்டு கேள்விக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த வழங்கள் ஒப்பாக வெளிநாடுகளில் கேள்விகளுக்கு வழங்குவதில் கண் வங்கி கூடிய கவனம் செலுத்தியிருந்தது என அவதானிக்கப்பட்டது. | தேசிய கண் வங்கி வரையறுக்கப்பட்ட பதவியணியினருடன் கடமை ஆற்றப்படுகின்றது எனவும் தேசிய கண் வங்கி கூடிய கவனம் செலுத்துவது உள்நாட்டு விழிவென்படலம் வழங்களுக்காகவே என. | உள்நாட்டு விழிவென்படல தேவைப்பாட்டை பூர்த்தி செய்வதற்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும். |

## 3.3 நிதிய குறை பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆண்டின் சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் செயல் நடவடிக்கை திட்டத்தின் மூலம் மதிப்பீட்டு கிரயம் ரூபா 306.2 மில்லியன் தொகைக்கான 09 கருமங்களை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்த்திருந்த போதிலும் அவற்றில் மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 248.2 மில்லியன் தொகைக்கான 07 கருமங்கள் ஆண்டின் போது நிறைவேற்றியிருக்கவில்லை. அதே போல் இலங்கையின் சுகாதார சேவையை மேம்படுத்துவதற்காக தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்திற்கு சொந்தமான பொது நிதியத்தை பயன்படுத்துதல் பலவீன நிலைமை ஒன்று காணப்பட்டதுடன் 2022 திசெம்பர் 31 திகதியளவில் பொது நிதியத்தின் திரண்ட வருமானம் ரூபா 608,943,133 தொகையாக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது பொது நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்த தொகை ரூபா 141,871,323 தொகை மாத்திரமே ஆகும். இதன் படி நிதியத்தின் பணப் பயன்பாடு 23 சதவீதம் ஆகிய குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் நம்பிக்கை பொறுப்பு சபையினால் அங்கீகரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பெறுமதி ரூபா 206 மில்லியன் தொகையாகும். ரூபா 96.2 மில்லியன் தொகை மேலதிக இரண்டு கருமங்களும் நிதியம் காணப்படின் மாத்திரம் செயற்படுத்துமாறு நம்பிக்கை பொறுப்பு சபையினால் அறிவுரை வழங்கப்பட்டிருந்தது என. | பொது நிதியத்தின் பணம் செயற்திறனுடன் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2014 ஆண்டு முதல் 2022 திசெம்பர் 31 திகதி வரையான காலப் பகுதியுள் ரூபா 449,988,680 தொகை லொத்தர் வருமானம் எனக் கிடைத்திருந்ததுடன், குறிப்பிட்ட காலப் பகுதியில் வைத்தியசாலை உபகரணங்கள் கொள்வனவு செய்தல் மற்றும் வைத்தியசாலைகளின் திருத்த வேலை மேற்கொள்ளல் ஆகிய குறிக்கோள் சார் கருமங்களுக்காக கூட்டுத்தொகை ரூபா 241,948,616 தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. அதன் படி லொத்தர் வருமானத்தின் பயன்பாடு 54 சதவீதம் போன்ற குறைந்த மட்டத்திலே காணப்பட்டது. | தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்திற்கு அடிப்படையாக பணம் கிடைப்பது லொத்தர் வருமானத்தின் மூலமாகவே ஆகும். நிதியத்தை நிர்வகிப்பதற்காக மேற்கொள்ளப்படும் செலவுகளும் நிதியத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக நிதியம் பயன்படுத்துவதும் லொத்தர் வருமானத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது என. | சுகாதார அபிவிருத்தி லொத்தர் மூலம் கிடைக்கும் வருமானம் அந்த லொத்தரின் குறிக்கோள் சார் கருமங்களை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தப்பட வேண்டும். |